# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## *2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்*

---

*(2017 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2017, மே மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா *14.00*** **தபாற் செலவு : ரூபா *10.00***

**2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம்**

[*2017 ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.*]

*ச.வ.ஒ. 72 /2016*

**2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

***1.** இச்சட்டம், 2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, பொருளா தாரச் சேவை விதிப்பனவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் எந்தத் தேதியன்று குறித்த சில ஏற்பாடுகள் நடைமுறைக்குவருதல் வேண்டுமோ அத்தேதி அத்தகைய பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டிருந்தாலன்றி, 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வந்துள்ளதாகக் கருதப் படுதலும் வேண்டும்.*

*2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சட்டத்தின் 2 ஆம் பிரிவினைத் திருத்துதல்.*

***2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, பொருளாதாரச் சேவை விதிப்பனவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுன்றது:-*

*(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவினை நீக்கிவிட்டு, அதற் குப் பதிலாகப் பின்வரும் புதிய உட்பிரிவினை இடுவதன் மூலமும் :-*

*"(1) (இதனகத்துப்பின்னர் "சேவை விதிப்பனவு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) பொருளாதாரச் சேவை விதிப்பனவொன்று இச்சட்டத்தின் ஏற்பாடு களுக்கமைய, இச்சட்டத்திற்கான விடயத்துக்கேற்ப, அட்டவணை* I, *அட்டவணை* II, *அட்டவணை* III *அல்லது அட்டவணை* IV *இல் குறித்துரைக்கப்படும் தோதான விகிதத்தில் –*

*(அ) (இச்சட்டத்தில் இதனகத்துப்பின்னர் "இயை பானவொரு காலாண்டு" எனக் குறிப்பீடு*

செய்யப்படும்) 2006, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற, அவ்வியைபான காலாண்டுக்கு அத்தகைய ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவின் ஒவ்வொரு பாகம் தொடர்பிலும் ; அத்துடன்

(ஆ) (i) 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டிற்கமைய ஏதேனும் பொருளின் இறக்குமதிகளின் அனுப்புபொருள் ஒவ்வொன்று தொடர்பிலும் ;

(ii) 2016, நவெம்பர் 24 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், தங்கத்தின் அல்லது வேறு விலையுயர்ந்த உலோகத்தின் இறக்குமதிகளின் அனுப்பு பொருள் ஒவ்வொன்று தொடர்பிலும் ; அல்லது

(iii) 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர், மோட்டார் வாகனங்களின் இறக்குமதிகளின் அனுப்புபொருள் ஒவ்வொன்று தொடர்பிலும்,

அத்தகைய ஆளினதான அல்லது பங்காண்மையினதான, சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் சான்

றுப்படுத்தப்பட்ட ஆகுசெலவு, காப்புறுதி மற்றும் கேள்வுப் (ஆகாகே) பெறுமதி மீதும்,

ஒவ்வொரு வரிமதிப்பீட்டாண்டின் ஒவ்வொரு காலாண்டிற்குமாக ஒவ்வொரு ஆளிடமிருந்தும் ஒவ்வொரு பங்காண்மையிடமிருந்தும் அறவிடப்படுதல் வேண்டும் :

ஆயினும், இச்சட்டத்திற்கு முரணாகவுள்ளது எதுவும் எவ்வாறிருப்பினும், அத்துடன் விடயத்திற்கேற்ப இச்சட்டத்திற்கான அட்டவணை I, அட்டவணை II, அட்டவணை III அல்லது அட்டவணை IV இல் குறித்துரைக்கப்பட்ட தோதான வீதங்கள் எது எவ்வாறிருப்பினும், ஏதேனும் பொருட்களின் அல்லது பண்டங்களின் ஏற்றுமதியிலிருந்து 2008, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர், ஆனால் 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் எழுகின்ற மொத்த விற்பனை வரவு தொடர்பில் விதிக்கப்படற்பாலதான சேவை விதிப்பனவு விகிதம் 0.25 சதவீதத்தை விஞ்சுதலாகாது.";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்-

(அ) "அத்தகைய இயைபான காலாண்டிற்கு அத்தகைய ஆளிடமிருந்து அல்லது பங்காண்மையிடமிருந்து சேவை விதிப்பனவு விதிக்கப்படுதல் ஆகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும் இயைபான காலாண்டிற்கு, (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் சேவை விதிப்பனவுக்கு ஆளாகியுள்ள எவரேனும் ஆள் அல்லது பங்காண்மை தவிர்ந்த வேறு எவரே

னும் ஆளிடமிருந்து அல்லது பங்காண்மையிட மிருந்து சேவை விதிப்பனவு விதிக்கப்படுத லாகாது." என்னும் சொற்களையும் எண்களை யும் இடுவதன் மூலமும்;

(ஆ) பந்தி (ஈ) யில்,

(i) "2012, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2012, ஏப்பிறல் 1 ஆந் தேதி யன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

(ii) "ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில்," என்னும் சொற்களுக் குப் பதிலாக, "ஐம்பது மில்லியன் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைகளில்;" என்னும் சொற்களை இடுவதன் மூல மும் ;

(இ) பந்தி (ஈ) யினை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன்மூலமும் -

"(உ) 2017, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலாண்டிற்கு எவரேனும் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு பன்னிரெண்டு மில்லியன் ஐந்து இலட் சம் ரூபாவை விஞ்சாத சூழ்நிலைக ளில்,"; அத்துடன்

(ஈ) காப்புவாசகத்தின் (ii) ஆம் உட்பந்தியில் "2009, ஏப்பிறல் மாதம் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2009, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில் "2012, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2012, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஆனால், 2016, மாச்சு 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைகின்ற" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது இத்தால் மேலும் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கான காப்புவாசகத்தில், "அவ்வளவிற்கு கழிக்கப்படுதல் வேண்டும்.", என்னும் சொற்களுக்குப் பதிலாக -

"அவ்வளவிற்கு கழிக்கப்படுதல் வேண்டும்:

ஆயினும் மேலும், விடயத்திற்கேற்ப, (1) அல்லது (2) ஆம் உட்பிரிவுகளுக்கு இணங்க கழிப்பனவு செய்த பின்னர் சேவை விதிப்பனவாக 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற

*ஏதேனும் இயைபான காலாண்டுகளுக்கு அறவிடப் பட்டதற்கும் முதலாவது குறிப்பிடப்பட்ட வரிமதிப் பீட்டாண்டை உடன் அடுத்துறும் இரண்டு ஆண்டுகள் காலப்பகுதியினுள் ஒவ்வொரு மதிப்பீட்டாண்டுக்கும் பகிரப்பட்டதற்கும் ஏதேனும் மீதியிருப்பின், அந்த மீதியும் அத்துடன் அத்தகைய ஏதேனும் வரிமதிப் பீட்டாண்டுக்கு அவ்வாறு பகிரப்பட்ட தொகையும், அவ்வரிமதிப்பீட்டாண்டிற்கு அத்தகைய ஆளினால் அல்லது அத்தகைய பங்காண்மையின் பங்காளரினால் செலுத்தப்படற்பாலதான வருமான வரியிலிருந்து அவ்வாறு கழிக்கப்பட முடியும் என்ற அளவிற்கு கழிக்கப்படுதல் வேண்டும்.”; அத்துடன்*

*(2) அப்பிரிவின் (3ஆ) என்னும் உட்பிரிவினை உடனடுத் துப்பின்னர் பின்வரும் புதிய உட்பிரிவுகளை உட்புகுத் துவதன்மூலமும் -*

*“(3இ) இரண்டாம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் சேவை விதிப்பனவிற்கு ஆளாகியுள்ள எவரேனும் ஆளினால் அல்லது ஏதேனும் பங்காண்மையினால் செலுத்தப்படவேண் டிய விதிப்பனவின் தொகை -*

*(அ) எந்த காலாண்டிற்கு சேவை விதிப்பனவானது 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் ஆக்கப்பட்டிருக்கிறதோ அந்த ஏதேனும் காலாண்டிற்கு 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் எழுகின்ற அத்தகைய ஆளின் அல்லது பங்காண்மையின் பொறுப்பானது, சேவை விதிப்பனவிற்கு எதிராக வரவு வைக்கப்பட லாம்; அத்துடன்*

*(ஆ) பந்தி (அ)வின்கீழ் வரவுவைக்கப்பட்ட சேவை விதிப்பனவு தொகை மற்றும் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின்கீழ் செலுத்தப்பட்டுள்ளதும் ஆனால் (அ) என்னும்*

பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு வரவு வைக்கப் படாதுள்ளதுமான சேவை விதிப்பனவு இப்பிரிவின் (1), (2) அல்லது (3) ஆம் உட்பிரிவிற்கு இணங்க கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4**. இரண்டாயிரத்துப்பதினைந்தாம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தினால் இறுதியாக திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு "ஆள்" என்னும் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தின் (எ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாக பின்வருவதனை இடுக -

"(எ) இலங்கை மத்திய வங்கி 2017, மாச்சு 31 ஆந் திகதிக்கு முன்னர் ; அத்துடன்".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் III ஆம் அட்டவணையினைத் திருத்துதல்.*

**5**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான III ஆம் அட்டவணையானது, "2011, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலப் பகுதிக்கு" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2012, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் ஆனால், 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கு" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தில் IV ஆம் அட்டவணையினை உட்புகுத்துதல்.*

**6**. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான III ஆம் அட்டவணையினை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணை இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், அச்சட்டவாக்கத்தின் IVஆம் அட்டவணையாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"**அட்டவணை** IV [பிரிவு 2]

***2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று தொடங்கும் காலப்பகுதிக்கு***

| *செலுத்தத்தகு மொத்த விற்பனை வரவின் பாகம்* | *அப்பாகத்திற்கு ஏற்புடையற்பால தான சேவை விதிப்பனவின் வீதம்* |
|---|---|
| *1.* பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய் என்பவற்றின் சில்லறை விற்பனை செய்யும் ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவு தவிர, இயைபான மொத்த விற்பனை வரவின்மீது. | 0.5 சதவீதம் |
| *2.* பெற்றோல், டீசல் அல்லது மண்ணெண்ணெய் என்பவற்றின் சில்லறை விற்பனையிலிருந்து ஆளின் அல்லது பங்காண்மையின் இயைபான மொத்த விற்பனை வரவின் 1/10 மீது. | 0.5 சதவீதம்.". |

செல்லுபடியாக்குதல்.

**7**. 2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து தொடங்குகின்றதும் இச்சட்டம் தொடர்பில் சபாநாயகரின் சான்றிதழ் புறக்குறிப்பிடப் பட்ட தேதியன்று முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப் பகுதியின்போது இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு பொரு ளாதார சேவை விதிப்பினை சேகரிப்பதற்கு அதிகாரமளிக்கப் படுகின்ற எவரேனும் ஆள், முறையான அதிகாரத்துடன் செயற்பட்டுள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேகரிப்பு செல்லுபடியானமுறையில் செய்யப் பட்டுள்ளதாகவும் செய்யப்படவுள்ளதாகவும் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆளுக்கு அத்தகைய சேகரிப்பு தொடர்பில் குடியியல் அல்லது குற்றவியல் வழக்கு எல்லாவற்றுக்கும் எதிராக இத்தால் நட்டோத்தரவாதமளிக்கப் படுகின்றார்.

ஆயின், மேற்சொல்லப்பட்ட ஏற்பாடுகள் அத்தகைய காலப் பகுதியின்போது, இச்சட்டத்தில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு சேகரிக்கப்பட்ட ஏதேனும் வரி தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்

*தினால் செய்யப்பட்ட ஏதேனும் முடிபை அல்லது கட்டளையை அல்லது ஏதேனும் நீதிமன்றத்தில் முடிவுறாதிருக்கும் வழக்கு நடவடிக்கையை பாதித்தல் ஆகாது.*

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*